முருகப்பெருமான் துணை

**மகான் பூசலார் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.11.2023**, புதன்கிழமை

1. ஞானியே கலியிடர் வெல்ல வந்த
ஞான பண்டிதன் அவதாரமே
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது துலைதிங்கள்
இருபானீர் திகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 22 ம் நாள், 08.11.2023, புதன்கிழமை)
இயம்பிடுவேன் பூசலார் யானும்
3. யானுமே உலகநலம் பெறவும்
உலகோர் ஞான பலம் பெறவும்
ஞான தேசிகன் தருகின்ற உண்மை
ஞானவழிகளை எடுத்துரைப்பேன்
4. உரைக்கவே தீவினை குற்றம் சேரா
உலகோர்கள் கடைத்தேற்றம் பெற
குறைவின்றி அருளும் ஞானி
கும்பமுனி ஆறுமுகனார் அம்சமாக
5. ஆகவே பலஅற்புதம் நிகழ்த்த
அனுகி அவர் நிழல் தயவு
வகைபட பெற்ற மக்களுக்கு
வளம் பெறும் வரம் பெற தடையேது
6. ஏதுவான இயல்பு வாழ்விலும்
இப்பிறவி நோக்கம் என்ன என
பூதலத்தில் மெய்மை விளங்கி
பிறவாமை வேண்டும் எனும் உறுதி

7. உறுதி கொள்ளும் அறிவுத் தெளிவு
உண்மை ஞானம் கண்டடைவர்
ஆறுமுகனாரின் சரவண ஜோதி
ஆற்றல்மிக்க வழிபாடுமுறை தனை
8. முறையாகக் கடைப்பிடித்துமே
முழுமை காணும் வண்ணம்
குறைவிலா தேற்றம் பெறுவர்
கூறிட அன்னதானமெனும்
9. தானமெனும் அறநெறி வாழ்வு
தவராஜன் ஆசிபட கிட்டியே
ஞானவானாக ஞானவாழ்வாக
நடைமுறை மாற்றமிருக்க
10. இருக்கவே நம்பிக்கை வைத்து
ஈதூழில் கலிவாழ் மக்கள்
கருத்தாக அரங்கன் திருவடிபற்றி
கடைத்தேற்று என வேண்டி
11. வேண்டிவர பின்னடைவு இல்லை
வேண்டிவர இனி பிறவி இல்லை
தொண்டுபுரிய மேலவர் தயவில்
தேசிகன் வழி ஞானிகளாவர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–